விருத்தாசலம் நகராட்சி

நிர்வாக அறிக்கை

2021-2022

தோற்றமும் எல்லையும் :

தமிழ்நாடு அரசின் 17.04.1888–ம் நாளிட்ட 139 எண் உத்திரவின் படி ஊராட்சியாக அமைக்கப்பட்ட விருத்தாசலம் ஊராட்சியுடன் அதனைச் சுற்றியுள்ள ஆறு வருவாய் கிராமங்களையும் (ஊராட்சிகள்) சேர்த்து தமிழ் நாடு அரசு ஆணை எண்–59 (ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறை) நாள். 12.01.70–ன் படி 17.01.1970முதல் மூன்றாம்நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. பின்பு அரசு ஆணை எண்–533 ஊரக வளர்ச்சி உள்ளாட்சி துறை நாள்–22–03–1975ன்படி 10–05–1975 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்வு செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து மன்ற தீர்மான எண்–327 நாள்.29.09.1997–ல் முதல் நிலை நகராட்சியாக உயர்வு செய்ய பிரேரணைகள் அனுமதிக்கப்பட்டதில் அரசு ஆணை எண்–85 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 22.05.1998–ன் படி முதல் நிலை நகராட்சியாக உயர்வு செய்து ஆணையிடப்பட்டு முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் அடங்கிய கிராமங்கள்:

விருத்தாசலம் பேரூராட்சியுடன் முதலில் மணலூர், நாச்சியார்பேட்டை,வயலூர், கண்டியங்குப்பம் (ஒரு பகுதி மட்டும்) பூதாமூர், பூந்தோட்டம் ஆகிய ஊராட்சிகளையும் சேர்த்து 17.01.1970 முதல் விருத்தாசலம் நகராட்சியாக உயர்த்தப்பட்டு பின்பு 19.01.1972 முதல் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறையின் 09.01.1972–ம் நாளிட்ட அரசாணை எண்–246–ன் படி கண்டியங்குப்பம் ஊராட்சியில் விடுபட்ட பகுதிகளையும் இந்த நகராட்சியுடன் சேர்த்து முதலில் மூன்றாம் நிலை நகராட்சியாகவும் தற்போது முதல் நிலை நகராட்சியாகவும் இயங்கி வருகிறது.

மக்கள் தொகை:

2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 73415 ஆகும்.

நகர மன்ற பதவிக் காலம்

விருத்தாசலம் நகர் மன்ற உறுப்பினர்கள்

நகராட்சி நிர்வாகம்மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண். 145, நாள். 24.10.2016ன்படி நகராட்சிகளில் ஆணையாளர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டு அதன்படி 01.04.2021 முதல் 20.07.2021 முடிய திரு. கு.அசோக்குமார் ஆணையாளர், அவர்கள் தனி அலுவலராகவும், 04.08.2021 முதல் 04.01.2022 முடிய **திரு. சு.அருள் செல்வன். ஆணையாளராகவும் தனி அலுவலராகவும்,** 05.01.2022 முதல் 4.03.2022 முடிய திரு. தா. ஜெயபிரகாஷ் நாராயணன், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(கூ.பொ) **ஆகவும் தனி** அலுவலராகவும் செயல்பட்டுள்ளனர்.

மேலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செய்தி வெளியீடு எண். 7/2021 நாள். 26.01.2022ன்படி நகரமன்ற தலைவர்களை தேர்ந்தெடுக்க 19.02.2022 அன்று நகர்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் நடத்தப்பட்டது. மேலும், 22.02.2022 அன்று வாக்கு எண்ணிக்கை நடத்தப்படடு, கீழ்க்கண்ட விபரப்படி நகரமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

வார்டு எண்	பெயர்	கட்சி
1	திரு. கிருஷ்ணமூர்த்தி கா	தி. மு. க
2	திரு. ராஜ்குமார் ஆ	தே. மு. தி. க
3	திரு. வெங்கடேசன் க	சுயேட்சை
4	திரு. முத்துக்குமரன் த	தி. மு. க
5	திரு. ராஜேந்திரன் ரா	அ.இ.அ.தி.மு.க
6	திருமதி. குமாரி மு	பா.ம.க
7	திரு. தளபதி வே	தி. மு. க
8	திருமதி. சுந்தரி ச	தி. மு. க
9	திருமதி. ஜெயலட்சுமி ந	தி. மு. க
10	திருமதி. அழகுபிரியா ஜெ	அ.இ.அ.தி.மு.க
11	திருமதி. உஷா பா	தி. மு. க
12	திரு. மணிவண்ணன் த	தி. மு. க
13	திரு. கருணா நிதி ஹ	சுயேட்சை
14	திருமதி. ஷகிலா ரா	தி. மு. க
15	திரு. அன்சர் அலி மு	தி. மு. க
16	திருமதி. தீபா மா	தி. மு. க
17	திரு. பாண்டியன் தெ	தி. மு. க
18	திரு. அன்பழகன் த	தி. மு. க
19	திரு. ஞானசேகரன் ப	தி. மு. க
20	திருமதி. மு. சங்கவி	தி. மு. க
21	திரு. அருண் வி எல்	அ.இ.அ.தி.மு.க
22	திருமதி. அருள்மணி செ	தி. மு. க
23	திரு. சந்திரகுமார் பி ஆர் சி	அ.இ.அ.தி.மு.க
24	திருமதி. வசந்தி பு	தி. மு. க
25	திருமதி. ராஜாத்தி ச	தி. மு. க
26	திருமதி. அறிவழகி ஆ	தி. மு. க
27	திரு. சிங்காரவேல் சா	பா.ம.க
28	திருமதி. ராணி த	தி. மு. க
29	திருமதி. கரிமுன்னிஷா மு	தி. மு. க
30	திரு. பக்கிரி சாமி வை	தி. மு. க
31	திருமதி. சரசு ர	அ.இ.அ.தி.மு.க
32	திருமதி. குணசுந்தரி கொ	பா.ம.க
33	திருமதி. பிரியா ஆ	அ.இ.அ.தி.மு.க

மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட வார்டு உறுப்பினர்களின் முதல் கூட்டம் மற்றும் பதவி ஏற்பு விழா 02.03,2022 நடத்தப்பட்டது. மேலும், நகராட்சி தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று காலை 9.30 மணிக்கு நடத்தப்பட்டு,

திருமதி. மு. சங்கவி, அவர்கள் நகரமன்ற தலைவராக போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

மேலும் நகராட்சி துணைத் தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான மறைமுக தேர்தல் 04.03.2022 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடத்தப்பட்டு,

திருமதி.த.ராணி அவர்கள் நகரமன்ற துணைத் தலைவராக போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் செய்தி வெளியீடு எண். 63/ 2022 நாள். 14.03.2022 ன்படி 31.02.2022 அன்று காலை 9.30 மணிக்கு வரிவிதிப்பு மேல் முறையீடு குழு உறுப்பினர்கள் பணி நியமனக் குழு உறுப்பினர் மற்றும் ஒப்பந்த குழு உறுப்பினர் தேர்ந்தெடுப்பதற்கான மறைமுகை தேர்தல் கூட்டம் நடத்தப்பட்டு கீழ்க்கண்டவாறு உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

1. **<u>வரி மேல் முறையீட்டு குழு உறுப்பினர்கள்.</u>**

1. திரு. வே. தளபதி, வார்டு எண். – 7 வது வார்டு
2. திருமதி. ந.ஜெயலட்சுமி, வார்டு எண். – 9 வது வார்டு
3. திரு.த.அன்பழகன், – 18 வது வார்டு
4. திரு. வை.பக்கிரி சாமி , – 30 வது வார்டு

2. **<u>ஒப்பந்த குழு உறுப்பினர்</u>**

1. திருமதி.மு. கரிமுன்னிஷா வார்டு எண். – 29 வது வார்டு

3. **<u>பணி நியமன குழு உறுப்பினர்</u>**

1. திரு.மு. அன்சர் அலி வார்டு எண் – 15 வது வார்டு

மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றத்தின் முதல் கூட்டம் 23.03.3022 அன்று நடத்தப்பட்டு நகரமன்றம் செயல்பட்டு வருகிறது.

கூட்டங்கள்

இவ்வறிக்கையாண்டில் கீழ்கண்டபடி கூட்டங்கள் நடத்தப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வ.எண்.	இனங்கள்	கூட்டத்தின் எண்ணிக்கை	முடிவு செய்யப்பட்ட பொருட்கள்
1	சாதாரண கூட்டம்	–	–
2	சிறப்பு கூட்டம்	–	–
3	அவசரக் கூட்டம்	–	–

பொது நிர்வாகம்

நிர்வாகம்

விருத்தாசலம் நகராட்சி அலுவலகம் அப்யனார் கோவில் தெருவில் அமைந்துள்ள சொந்த கட்டிடத்தில் இயங்கி வருகிறது. அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்டவாறு.

01.04.2021 முதல் 20.07.2021 வரை	திரு. கு. அசோக்குமார், ஆணையாளர்
21.07.2021 முதல் 03.08.2021 வரை	திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பிரதிநிதி),
04.08.2021 முதல் 04.01.2022 முடிய	திரு. சு. அருள்செல்வன், ஆணையாளர்.
05.01.2022 முதல் 31.03.2022 முடிய	திரு. தா. ஜெயபிரகாஷ் நாராயணன், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(கூ.பொ)

வ.எண்.	அலுவலர்கள் பதவி	அலுவலர் பெயர் மற்றும் பதவி பெயர்
1.	நகராட்சி ெ பாறியாளர் மற்றும் ஆணையாளர் (பொ) ஆணையாளர்	திரு. கு. அசோக்குமார், ஆணையாளர் 01.04.2021 முதல் 20.07.2021 வரை திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(பிரதிநிதி), 21.07.2021 முதல் 03.08.2021 வரை திரு. சு. அருள்செல்வன், ஆணையாளர்.

		05.08.2021 முதல் 04.01.2022 வரை திரு. தா. ஜெயபிரகாஷ் நாராயணன், நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர்(கூ.பொ) 05.01.2021 முதல் 31.03.2022 வரை
2.	பொறியாளர்	திரு. சி. பாண்டு, நகராட்சி பொறியாளர் , 01.04.2021 முதல் 31.08.2021 வரை திரு. தா. ஜெயபிரகாஷ் நாராயணன், நகராட்சி பொறியாளர் 01.09.2021 முதல் 31.03.2022 வரை
3.	சுகாதார அலுவலர்	திரு. டி. முத்துகணேஷ் 01.04.2021 முதல் 31.03.2022 வரை
5.	துப்புரவு ஆய்வாளர்	திரு. சாம் கலோனல் 01.04.2021 முதல் 01.12.2021 வரை திரு. டி. சிவராமகிருஷ்ணன் 06.12.2021 முதல் 31.03.2022 வரை
6.	நகரமைப்பு ஆய்வாளர்	திரு. ஆ.சேகர் 1.04.2021 முதல் 03.12.2021 வரை திரு. ,ராமன், இளநிலை பொறியாளர் (கூடுதல் பொறுப்பு) 04.12.2021 முதல் 31.03.2022 வரை
7.	வருவாய் ஆய்வாளர்	திரு.ப.மணிவண்ணன், 1.04.2021 முதல் 31.03.2022
8.	மேலாளர்	திரு. கோ. அசோக்குமார், 01.04.2021 முதல் 31.03.2022 வரை

அலுவலர்கள் பணிபுரிந்துள்ளனர்.

பொதுப்பிரிவு

இந்நகராட்சி பொது பிரிவு நிர்வாகத்தில் ஒரு மேலாளர், ஒரு உதவியாளர், எட்டு இளநிலை உதவியாளர்கள் , ஒரு தட்டச்சர், ஒரு பதிவறை எழுத்தர் ஐந்து அலுவலக உதவியாளர் , ஒரு கணினி திட்ட உதவியாளர், ஒரு ஓட்டுனர், மற்றும் இரு சமுதாய அமைப்பாளர் ஆக மொத்தம் 21 பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வந்துள்ளனர். பொது பிரிவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் இவர்களுக்கு ரூ. 84.26 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.சென்ற ஆண்டில் ரூ. 73.04 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

வருவாய் பிரிவு

இந் நகராட்சி வருவாய் பிரிவில் ஒரு வருவாய் ஆய்வாளர் , எட்டு வருவாய் உதவியாளர் மற்றும் ஒரு அலவலக உதவியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு 10 பணியாளர்கள் பணிபுரிந்து வந்துள்ளனர். வருவாய் பணியாளர்களுக்கன ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.41.58/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 41.21 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1.சொத்து வரி

1920 ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்திற்குட்பட்ட கட்டிடங்களுக்கு ஆண்டு வாடகை மதிப்புபடி சொத்து வரி விதிக்கப்பட்டது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து கட்டிடங்களுக்கும் சொத்து வரி 1970 ஆம் ஆண்டு முதல் திருத்தி அமைக்கப்பட்டு கீழ்கண்ட விகிதாரசாரத்தில் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

வ.எண்.	வரி தலைப்புகள்	சதவீகிதம்
1	பொது பயன்பாடு வரி மற்றும் குடிநீர் வடிகால் வரி	7,5
3	கல்வி வரி	2.5
4	நூலக வரி	0.10

சொத்துவரியுடன் திடக்கழிவு பயனாளர் கட்டணம்.

வ.எண்.	நிர்ணயிக்கப்பட்ட தொகை	காலம்	மாத கட்டணம்	வருட கட்டணம்
1.	சொத்துவரி ரூ. 500/– க்கு குறைவாக இருந்தால் அரையாண்டுக்கு	1 மாதத்திற்கு	30/-	360/-
2.	சொத்துவரி 501/–க்கு மேல் 1000/–க்குள் இருந்தால்	1 மாதத்திற்கு	40/-	480/-
3.	சொத்துவரி 1001/–க்கு மேல் 2000/–க்கு குறைவாக இருந்தால்	1 மாதத்திற்கு	50/-	600/-
4.	சொத்துவரி 2001 முதல் 5000/– வரை இருந்தால்	1 மாதத்திற்கு	60/-	720/-

1.7.2017 முதல் நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

2.காலிமனை வரி

அறிக்கை ஆண்டில் கட்டிடங்களுக்கு காலி மனை வரி கீழ்கண்ட விவரப்படிக்கான மண்டலங்களுக்கு வரிவிதிக்கப்பட்டுள்ளது,

வ.எண்	மண்டலம்	ஒரு சதுரடிக்கு
1	A	40 பைசா
2	B	30 பைசா
3	C	20 பைசா

சொத்துவரி

அறிக்கை ஆண்டில் 331 எண்ணிக்கை கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 15170 எண்ணிக்கை சொத்துவரி விதிப்புகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ.208.24 இலட்சம் சொத்துவரி வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 192.73 இலட்சம் சொத்துவரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

காலிமனை வரி அறிக்கை ஆண்டில் 1126 எண்ணிக்கை காலி மனைகளுக்கு வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1126 எண்ணிக்கை காலிமனை விதிப்புகளுக்கு நடப்பு ஆண்டில் ரூ. 26.03 /– இலட்சம் காலிமனை வசூல் செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 33.39 /– இலட்சம் காலிமனை வரி வசூல் செய்யப்பட்டுள்ளது.

3.தொழில்வரி

அறிக்கையாண்டில் தனி நபர்களுக்கு தொழில் வரி விதிக்கப்பட்டு நடப்பு ஆண்டில் ரூ. 09.78 /– இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது . சென்ற ஆண்டில் ரூ.05.32/– இலட்சம் தொழில் வரி வசூல் செய்யப்பட்டுள்ளது. மேலும் நிறுவனங்களுக்கான தொழில்வரி ரூ. 39.06/- இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

4.வரியில்லா இனங்கள்

அறிக்கையாண்டில் குத்தகை இணங்களில் 4 எண்ணிக்கை ஆண்டு குத்தகைக்கு விடப்பட்டு அதன் மூலம் ரூ. 08.61/– இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது. நகராட்சி கடைகள் மற்றும் கட்டிடங்கள் குத்தகைக்கு அளித்த வகையில் ரூ.126.96/– இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

5. பிற வகை வரியினங்கள்

அறிக்கையாண்டில் பிற வரியில்லா இனங்கள் வாயிலாக கீழ்கண்டபடி வருவாய் பெறப்பட்டுள்ளது.

1	விளம்பர கட்டணம்	**1.94 இலட்சம்**
2	கேளிக்கை வரி	**1.45 இலட்சம்**
3	முத்திரை தீர்வை வரி	**72.39 இலட்சம்**

கேளிக்கை வரி

அரசாணை எண். 107 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) நாள். 16.10.2017ன்படி 16.6.2017 முதல் கேளிகை வரி கீழ்க்கண்ட விபரப்படி

வ.எண்.	பொருள்	பழைய திரைப்படம்	புதிய திரைப்படம்
1.	தமிழ்மொழி திரைப்படம்	7%	8%
2.	மற்ற இந்திய திரைப்படம்	10%	15%
3.	ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழி திரைப்படம்	14%	20%

என்ற சதவீதத்தில் கேளிக்கை வரி விதிப்பு செய்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நகரமைப்புபிரிவு

இந் நகராட்சி நகரமைப்பு பிரிவில் ஒரு நகரமைப்பு ஆய்வாளர் பணியிடம் மட்டும் அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வந்துள்ளார். (டிசம்பர் 2021 முதல் காலி பணியிடம்) நகரமைப்பு பிரிவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 5.62/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 8.43/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் 86 எண்ணிக்கை கட்டிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் , நகர் ஊரமைப்பு துறை அனுமதி பெற்று மனை வரன்முறை அனுமதி மனைப்பிரிவுகள் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. பெரிய அல்லது சிறு தொழிற்சாலைகள் ஏதும் இந்நகராட்சி பகுதியில் இல்லை. மேலும் மனை வரன்முறை அபிவிருத்திக் கட்டணம் . 55 . 19 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. நகராட்சி கட்டிட அனுமதிக்கு வருவாய் ரூ. 33.56 /– இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதார பிரிவு

இந் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் ஒரு துப்புரவு அலுவலர் , மூன்று துப்புரவு ஆய்வாளர் நான்கு துப்புரவு பணி மேற்பார்வையாளர் , ஒரு களப்பணி உதவியாளர் , ஒரு மகப்பேறு உதவியாளர் ,ஒரு மகப்பேறு ஆயா , ஐந்து ஓட்டுனர்கள் மற்றும் ஒரு துலக்குநர் ஆகிய பணியிடம் மட்டும் அனுமதிக்கப்பட்டு அதில் ஒரு துப்புரவு அலுவலர் , ஒரு துப்புரவு ஆய்வாளர் நான்கு துப்புரவு பணி மேற்பார்வையாளர் , ஒரு களப்பணி உதவியாளர் , ஐந்து ஓட்டுனர்கள் மற்றும் ஒரு துலக்குநர் பணிபுரிந்து வந்துள்ளனர். பொது சுகாதார பிரிவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 68.45/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.47.30 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் , பொதுசுகாதார பிரிவில் 141 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு, அதில் 82 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வந்துள்ளனர். துப்புரவு பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ.345.85 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.372.64/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், 77துப்புரவு பணியாளர்கள் வெளிக்கொணர்வு அடிப்படையில் தனியார் மூலம் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு வெளிக்கொணர்வு தூய்மை பணியாளர்களுக்கான ஊதியம் நடப்பு ஆண்டில் ரூ.200.33/- இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.200.09/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது

பிறப்பு வீதமும் மகப்பேறு உதவியும்

பிறப்பு , இறப்பு பதிவு செய்யும் பணிகளை துப்புரவு ஆய்வாளரால் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விவரப்படி 382 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 581 இறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 1520 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டது. சென்ற ஆண்டு 1934 பிறப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் தனியர் மருத்துவ மனைகளில் பிறக்கும் குழைந்தைகள் விவரம் பெறப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும் மகப்பேறு உதவியாளரது நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை இயக்குநர், பொது சுகாதாரம், செங்கல்பட்டு அவர்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காலரா நோய் தடுப்பு–

அறிக்கை ஆண்டில் வாந்தி பேதி காணப்பட்டு மதுராந்தகம் அரசினர் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்கள் யாரும் இல்லை .

வ.எண்.	வியாதி	எண்ணிக்கை
1	காச நோயாளி	0
2	சீதபேதி	0
3	இருதய நோய்	259
4	வயிற்றுப் போக்கு	-
5	இதர நோய்கள்	143
6	டெங்கு	-
7	கோவிட் –19	3
மொத்தம்		**402**

திடக்கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல்

இந்நகராட்சியில் 33 வார்டுகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பை என பிரித்து புதியதாக வாங்கப்பட்டுள்ள உரக்கிடங்கு பசுமை உரக்குடில் அமைத்து இயற்கை உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் உணவகங்கள் மற்றும் திருமண மண்டபங்களில் வெளியாகும் குப்பைகளை அகற்றுதல் மூலம் பெறப்பட்ட கட்டணம் ரூ. 103.83/–இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. மேலும், திடகழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந் நகராட்சி பகுதியில் உள்ள தனி நபர் குடியிருப்பு ,வணிக வளாகங்கள் , உணவு விடுதிகள் , சிற்றுண்டி சாலை , மருத்துவ மணை , மொத்த வணிகர்கள் , சில்லறை வணிகர்கள் ஆகியோரிடமிருந்து சேகரிக்கப்படும் திடகழிவுகளை தரம் பிரித்து சேகரிக்க கட்டணம் நிர்ணயம் செய்து 2021-22 ஆம் ஆண்டு முதல் சொத்துவரி கட்டணத்துடன் வசூல் செய்யப்படுகிறது.

அபாகரமானதும் அருவருக்கதக்கதுமான விவரம்

அபாயகரமானதும், அருவறுக்க தக்கதுமான தொழில்கள் மூலம் அறிக்கையாண்டில் கடைகள்,உணவகங்கள் நடத்த உரிமையாணைகள் வழங்கப்பட்டதால் கட்டணமாக ரூ.92070/– வசூலிக்கப்பட்டுள்ளது.

உற்சவங்களும், விழாக்களும்

இந்நகரில் அருள்மிகு விருத்தகீரிஸ்வரர் திருக்கோவில் மாசி மக திருவிழா ஆண்டு தோறும் வெகு சிறப்பாக கெண்டாடப்பட்டு வருகின்றன. பிரகடனப்படுத்தப்பட்ட விழாக்கள் எதுவும் நடத்தப்படுவதில்லை.

கழிப்பிடம்

குடும்பங்கள் உள்ள இந்நகராட்சிப் பகுதியில் 17834 வீடுகள் கழிப்பறை வசதிகளுடன் இருக்கின்றன. தற்போது ,தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2857 குடும்பங்ளுக்கு மான்யத்துடன் கூடிய கழிப்பறை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டி தரப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மேலும் சமுதாய கழிப்பறைகள் 11 எண்ணிக்கை பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளது.

Bio Mining

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1ல் உள்ள வயலூர் பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மதிப்பீடு தொகை 103.00 இலட்சம் மதிப்பில் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரிக்கவும் மேலும் அந்த இடத்தில் உள்ள குப்பையினைஅப்புறப்படுத்தி இனிவரும் காலங்களில் நேரடியாக பொதுமக்களிடம் தரம் பிரித்து குப்பை வாங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு அதற்காக புதியதாக 5 இலரக வாகனம் வாங்கப்பட்டு (TATA ACE) பணிகள் நடைபெற்று வருகிறது.
மேற்கண்ட பணிக்காக இதுவரை ரூ. 103.00/- இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

மின்னனு நிர்வாகம்

மின்னனு நிர்வாக பணிகளை கவனிக்க கணினி ட்ட உதவியாளர் பணியிடம் ஒன்று அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்.இந் நகராட்சி மின்னனு நிர்வாக ஒரு பணியிடத்திற்கு நடப்பு ஆண்டில் ரூ. 6.24/- இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ. 6.02/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

பொறியியல் பிரிவு

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் ஒரு நகராட்சி பொறியாளர் நிலை 3 , ஒரு இளநிலை பொறியாளர் இரு குழாய் பொறுத்துநர், ஒரு மின்கம்பியாளர், ஒரு மின்கம்பி உதவியாளர், இரு கேங்கூலி, ஆகிய பணியிடம் மட்டும் அனுமதிக்கப்பட்டு அதில் ஒரு நகராட்சி பொறியாளர் நிலை 3 , ஒரு இளநிலை பொறியாளர் ஒரு மின்கம்பியாளர், ஒரு மின்கம்பி உதவியாளர், ஒரு கேங்கூலி, பணிபுரிந்து வந்துள்ளனர். பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 25.24/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.21.60 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

விருத்தாச்சலம் நகராட்சி

2021–2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிகளின் விவரம்

வ. எண்.	பணியின் விவரம்	மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில்
	தார் சாலை பணிகள்	228.71
	கட்டிடம்	25.00
	வருவாய் நிதி 2020–2021	8.60
	இதர பணிகள்	233.00
	கல்வி நிதி	0.00
	குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள்	12.25
	அலுவலக கட்டிடம்	0.00
	15th CFC	185.00

2022–2023 ஆம் ஆண்டில் நடைபெற உள்ள பணிகளின் விவரம்

வ. எண்.	பணியின் விவரம்	மதிப்பீட்டுத் தொகைரூ.இலட்சத்தில்
	வருவாய் நிதி	50.00
	15வது நிதிக்குழு திட்டம்	201.72
	சாலை பணிகள்	40.00
	கட்டிடம்	246.10
	சிறுபாலம்	10.00
	மழைநீர் வடிகால்வாய்	10.00
	திடக்கழிவு மேலாண்மை திட்டம்	0.00
	குடிநீர் குழாய் பராமரிப்பு பணிகள்	34.00
	கல்வி நிதி பணிகள்	39.90
	நகராட்சி அலுவலக கட்டிட பணிகள்	0.00
	இதர பணிகள்	596.66

குடி நீர் வழங்கல் பிரிவு

இந்நகராட்சி குடிநீர் பிரிவில் பிரிவில் இரு குழாய் பொறுத்துநர், இரு மின்பணியாளர், ஒரு இரவு காவலர் மற்றும் இரு துலக்குனர் ஆகிய பணியிடம் மட்டும் அனுமதிக்கப்பட்டு அதில் இரு குழாய் பொறுத்துநர், ஒரு மின்பணியாளர், ஒரு மின்கம்பியாளர், ஒரு மின்கம்பி உதவியாளர், ஒரு கேங்கூலி, ஒரு இரவு காவலர், பணிபுரிந்து வந்துள்ளனர். பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் இதரபடிகளுக்காக நடப்பு ஆண்டில் ரூ. 29.76/– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் ரூ.26.04 /– இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

குடிநீர் திட்டம்

இந்நகராட்சியால் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் 1964–ம் ஆண்டு முதல் செயல்பட்டுவருகிறது. கீழ்கண்ட பாதுகாக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

வ.எண்.	பகுதி மற்றும் மோட்டார் திறன்	வழங்கப்படும் தண்ணீர் அளவு மற்றும் பகுதிகள்
1.	வடக்குப் பகுதி பிரிவு 1 (ஜங்ஷன் ரோடு மேல் நிலைத் தொட்டி)	குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவுடைய பகிர்மானக் குழாய்6146.60 மீட்டர் நீளமுள்ள குழாய் மூலம் நாச்சியார்பேட்டை, புதுக்குப்பம், பூவராக நகர், ஆலடி ரோடு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.
2.	வடக்குப் பகுதி பிரிவு 2 (பேருந்து நிலைய ஆழ் குழாய் கிணறு)	குடிநீர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 2.00 லட்சம் லிட்டர் சி. பம்பிங் மெயின் (146.30 நீளமுள்ள) மூலம் நீர் ஏற்றப்பட்டு 8296.59 மீட்டர் நீளமுள்ள குழாயின் மூலம் செல்வராஜ் நகர், அண்ணா நகர், தாஷ்கண்ட் நகர் மற்றும் வீரபாண்டியன் தெருக்கள் ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வசதி செய்யப்படுகிறது.
3.	வடக்குப் பகுதி பிரிவு 3 (தெற்கு பெரியார் நகர் ஆழ்குழாய் கிணறு) 20 குதிரை வேக சக்தி நீர்மூழ்கி மோட்டார்.	குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 2.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை

		நீர் தேக்கத் தொட்டிக்கு அவ்விடத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணற்றிலிருந்து நீர் ஏற்றப்பட்டு 6318.83 மீட்டர் நீளம் உள்ள குழாய் மூலம் பெரியார் நகர், கடலூர் ரோடு, போலீஸ் குடியிருப்பு ஆகிய பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.
4.	தெற்குப் பகுதி (சாவடிக்குப்பம் ஆழ்குழாய் கிணறு) 30 குதிரை வேக சக்தி நீழ் மூழ்கி மோட்டார்.	குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியதினரால் கட்டி முடிக்கப்பட்டுள்ள 6.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு சாவடிக்குப்பம் ஆழ் குழாய் கிணற்றிலிருந்து 200 மிமீ ஏசி குழாய் மூலம் (3080 மீட்டர் நீளமுள்ள) நீர் ஏற்றப்பட்டு 10949 மீட்டர் நீளம் உள்ள குழாய் மூலம் நகரின் தெற்கு பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.
5.	சக்தி நகர் 25 குதிரை வேக சக்தி நீர் மூழ்கி மோட்டார்	கொள்ளளவு 2.00 லட்சம் லிட்டர் கொண்டது. சக்தி நகர், காமராஜ் நகர், கருணாநிதி நகர், பாரதி நகர், துர்கா நகர், முல்லை நகர், கிருஷ்ணா நகர், ஆலடி ரோடு (பகுதி), அன்பு நகர் ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.
6.	வடக்குப் பெரியார் நகர் 25 குதிரை வேக சக்தி நீர் மூழ்கி மோட்டார்	கொள்ளளவு 2.00 லட்சம் லிட்டர் கொண்டது. டிரைவர் காலனி, ராஜீவ் காந்தி நகர், நவநீதம் நகர் மற்றும் பெரியார் நகர் வடக்குப் பகுதி முழுவதும் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.
7.	வயலூர் ஆழ்குழாய் கிணறு 7.5 குதிரை வேக மோட்டார்	22500 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டி மூலம் நேரடியாக வயலூர் பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.
8.	கண்டியங்குப்பம் ஆழ்குழாய் கிணறு 10.0 குதிரை வேக சக்தி.	5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர் தேக்க தொட்டி மூலம் நேரடியாக கண்டியங்குப்பம் பகுதிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.

9.	பூந்தோட்டம் ஆழ்குழாய் கிணறு 15.0 குதிரை வேக சக்தி	10000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் தேக்கத் தொட்டி மூலம் நேரடியாக மேட்டுக் காலனிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.
10.	சாத்துக்கூடல் ரோடு ஆழ் குழாய் கிணறு 5.0 குதிரை வேக சக்தி	5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் நேரடியாக மேட்டுக் காலனிக்கு குடிநீர் வழங்கப்படுகிறது.
11.	நரிகுறவர் காலனி ஆழ் குழாய் கிணறு 7.5 குதிரை வேக சக்தி	5000 லிட்டர் மேல் நிலைத் தெர்ட்டி மூலம் நரிக்குறவர் காலனி மற்றும் செல்வராஜ் நகருக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது.
12.	பூதாமூர் இந்திரா நகர் ஆழ்குழாய் கிணறு 7.5 குதிரை வேக சக்தி	பூதாமூர், இந்திராநகர், சிதம்பரம் ரோடு முதலிய பகுதிகளுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது.
13.	பூதாமூர் புதுக்காலனி 10 குதிரை வேக சக்தி	பூதாமூர் புதுக்காலனி மற்றும் சிதம்பரம் சாலை பகுதிக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது.
14.	பெரியார் நகர் (எம்.ஜி. ஆர் நகர்) 10 குதிரை வேக சக்தி	எம்.ஜி. ஆர் நகர் பகுதிகளுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது.
15.	வீரபாண்டியன் தெரு 5.0 குதிரை வேக சக்தி	வீரபாண்டியன் தெருக்களுக்கு நேரிடையாக குடிநீர் வழங்கப்படுகிறது.
16.	அண்ணா நகர் 15 குதிரை திறன் வேக சக்தி	அண்ணா நகர் முழுவதும் நேரடி குடிநீர் விநியோகம் வழங்கப்படுகிறது.
17.	பெரியார் நகர் தெற்குப் பகுதி பூங்கா 10 குதிரை வேக சக்தி	நேரடி குடிநீர் விநியோகம் பெரியார் நகர் தெற்குப் பகுதி முழுவதும்.
18.	கஸ்பா காலனி 5.0குதிரை வேக சக்தி	நேரடி குடிநீர் விநியோகம் கஸ்பா காலனி மற்றும் பாரதி நகர்.
19.	முனியப்பர் கோவில் 10.0 குதிரை வேக சக்தி	நேரடி குடிநீர் விநியோகம் பூதாமூர் பகுதிகள்.

20.	வானொலி திடலில் 5.0 குதிரை வேக சக்தி	நேரடி குடிநீர் விநியோகம் சன்னதி தெரு, தீர்த்த மண்டப தெரு
21.	சாவடிக்குப்பம் 5.0 குதிரை வேக சக்தி	நேரடி குடிநீர் விநியோகம் துப்புரவு பணியாளர் குடியிருப்பு மற்றும் சாவடிக்குப்பம்.

நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு 90 லிட்டர் குறையாமல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் குடிநீர் குழாய்கள் பற்றி விபரம் வருமாறு.

டுபிட்கோ வட்டியில்லா கடனுதவி திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ. 429.20 இலட்சம் மதிப்பீட்டில் 12500 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க பணி உத்தரவு வழங்கப்பட்டு நடப்பாண்டு வரை 2300 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

1. பொது கிணறுகள் – 0 எண்ணிக்கை

2. கை பம்புடன் கூடிய ஆழ்துளை கிணறுகள் – 0 எண்ணிக்கை

3. சராசரியாக நாளொன்றுக்கு குடிநீர் விநியோகம்
   நபர் ஒன்றுக்கு வழங்கும் நீரின் அளவு
   தோராயமாக – 90 லிட்டர் ஆகும்.

4. தண்ணீர் வழங்கும் நேரம் – தினமும் இரண்டு வேளை 2 மணி நேரம் வழங்கப்படுகிறது.

குடிநீர் குழாய்கள் 31.03.2022 வரையில் அமைக்கப்பட்டுள்ள விவரம்

வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள்	7062
வீட்டு குடிநீர் குழாய் இல்லாத இணைப்புகள்	115
மொத்தம்	**7177**

பொதுக் குழாய்கள்

1. ஒற்றை பொதுக் குழாய் – 150
2. இரட்டை பொதுக் குழாய் – 0

வீட்டு உபயோகத்திற்கு தண்ணீர் வழங்க மாதத்திற்கு கட்டணம் ரூ 50/- ம் வீட்டு உபயோகம் அல்லாதவற்றிக்கு ரூ 250/- வீதமும் வசூலிக்கப்பட்டு வருகிறது.

குடிநீர் விநியோகப் பற்றாக்குறை ஏற்படும் நேரங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் நகராட்சியில் 5000 லிட்டர் கொள்ளளவு கொண்ட டேங்கர் லாரியின் மூலம் விநியோகிக்கப்படுகிறது.

குடிநீர் பராமரிப்பு பணியின் கீழ் இந்த நிதியாண்டில் பீளிச்சீங் பவுடர் வாங்கி குடிநீர் தொட்டிகள் சுத்திகரிப்பு செய்யப்பட்டு பராமரிக்கப்படுகிறது.

சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் முன்னோட்டம்

சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் நகரத்தில் வசிக்கக்கூடிய வேலை வாய்ப்பற்ற ஏழை மக்களுக்கான அடிப்படை வசதிகள் செய்து தரும் திட்டமாகும். சமூக அமைப்புகளை உருவாக்கி அம்மக்களுக்கு தேவையான அரசாங்க நலத்திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சமூக அமைப்புகள் வாயிலாக நிறைவேற்றுவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.சுவர்ண ஜெயந்தி திட்டத்திற்காக மத்திய அரசு 75 சதவிகிதமும் மாநில அரசு 25 சதவிகிதமும் , நிதியுதவி செய்கிறது. 2018–19 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் பணிகள் ஏதும் செய்யப்படவில்லை. இத்திட்டம் தற்போது (NULM) நகர்புற வாழ்வாதார இயக்கம் என்ற திட்டத்தின் கீழ் மகளிர் மேம்பாட்டு கழகத்தால் செயல்பட்டு வருகிறது.

புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்.

இத்திட்டம் இந்நகராட்சியில் 15.09.1982 முதல் செயல்பட்டு வருகிறது. அறிக்கையாண்டில் 4 நகராட்சி பள்ளிகளில் பயிலும் 5 முதல் 9 வது வரையில் உள்ள 209 மாணவ மாணவியர் மற்றும் 10 முதல் 14 வது வரையில் உள்ள 65 மாணவ மாணவியர்க்கு மேற்படி திட்டத்தின் கீழ் தினமும் சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவு திட்டத்தின் கீழ் உணவருந்தும் ஒவ்வொரு பள்ளி சத்துணவு மையத்திலும் ஒரு அமைப்பாளர் ஒரு சமையலர் மற்றும் ஒரு உதவியாளர் மற்றும் 1 சத்துணவு திட்ட உதவியாளர் உட்பட 13 பணி இடங்கள் அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு ஊதியம் கருவூலம் மூலம் அரசு நிதியில் பெற்று வழங்கப்பட்டு வருகிறது.

பொது விபரம்

சாலைகள்:

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டவாறு சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

வ.எண்.	சாலை	கிலோமீட்டர்
1	தார் சாலை	61.571
2	சிமெண்ட் சாலை	55.779
3	மண் சாலை	16.958
	மொத்தம்	**133.946**

ஆக மொத்தம் 133.946 மீ. சாலைகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

.கட்டிடங்கள்

1	அலுவலக கட்டிடங்கள்	1
2	பள்ளிகள்	12
3	சத்துணவு மையங்கள்	4
4	நகர்நல மையம்	1

5	பேருந்து நிலையம்	1
6	சமுதாயக் கூடம்	0
7	வணிக வளாகம்	0
8	பூங்கா	58
9	சமுதாய நல கழிப்பிடம்	11
10	திருமண மண்டபம்	0
11	கட்டண கழிப்பிடம்	3
12	காய்கறி மார்க்கெட்	1
13	ஆடு அறுக்கும் கூடம்	1
14	வார்டு அலுவலகம்	3
15	பேருந்து நிழற்குடை	5
16	தியான மண்டபம்	0
17	ரேஷன் கடை கட்டிடம்	5
18	வாகனம் நிறுத்தும் இடம்	0
	மொத்தம்	**106**

நீர் நிலைகள்

1	ஏரிகள்	2
2	கோயில் குளங்கள்	31
3	ஆழ்துளைக் கிணறுகள் (மோட்டார் பம்புடன்)	160
4	தலைமை நீரேற்று நிலையம்	0
5	கைபம்பு குழாய்	0
	மொத்தம்	**193**

பூங்கா

வ.எண்.	**மனைப்பிரிவு அமைந்துள்ள இடம்**	**இவ்விடத்தின் அருகாமையின் விபரம்**
1.	சக்திநகர் விரிவாக்கம் பூங்கா –I	சக்தி நகர்
2.	சக்திநகர் விரிவாக்கம் பூங்கா II	சக்தி நகர்
3.	அஜீஸ் நகர் பூங்கா	இந்திரா நகர்
4.	பாலசுப்ரமணியன் நகர் பூங்கா	ஆலிச்சிகுடி ரோடு சர்ச் பின்புறம்
5.	எஸ். ஆர். அவன்யூ பூங்கா	பெரியகண்டியங்குப்பம் ஆலடி ரோடு
6.	ஸ்ரீ கணபதி நகர் பூங்கா	பூதாமூர்
7.	ஓம் சக்தி நகர் பூங்கா – I	பூதாமூர்
8.	ஓம் சக்தி நகர் பூங்கா – II	பூதாமூர்
9.	ஓம் சக்தி நகர் பூங்கா – III	பூதாமூர்

10.	பி.எம்.ஒய். நகர் பூங்கா	மணலூர்
11.	ஸ்ரீ ரயில் நகர் விரிவாக்கம் V பூங்கா – I	எருமனூர் சாலை விரிவாக்கம், மணலூர்
12.	ஸ்ரீ ரயில் நகர் விரிவாக்கம் V பூங்கா – II	எருமனூர் சாலை விரிவாக்கம், மணலூர்
13.	அம்மா நகர் பூங்கா I	தில்லை நகர்
14.	அம்மா நகர் பூங்கா II	தில்லை நகர்
15.	ஸ்ரீ சக்தி நகர் பூங்கா I	ஆலடி ரோடு சக்திநகர்
16.	ஸ்ரீ சக்தி நகர் பூங்கா II	ஆலடி ரோடு சக்திநகர்
17.	ஸ்ரீ சக்தி நகர் பூங்கா III	ஆலடி ரோடு சக்திநகர்
18.	ஸ்ரீ சக்தி நகர் பூங்கா IV	ஆலடி ரோடு சக்திநகர்
19.	ஜெயபிரியா பைபாஸ் நகர் பூங்கா I	ஆலிச்சிகுடி ரோடு பைபாஸ்
20.	ஜெயபிரியா பைபாஸ் நகர் பூங்கா II	ஆலிச்சிகுடி ரோடு பைபாஸ்
21.	ஜெயபிரியா பைபாஸ் நகர் பூங்கா III	ஆலிச்சிகுடி ரோடு பைபாஸ்
22.	ஜெயபிரியா பைபாஸ் நகர் பூங்கா IV	ஆலிச்சிகுடி ரோடு பைபாஸ்
23.	தங்கமணியம்மாள் கார்டன் பூங்கா	ஸ்ரீ விருத்தகிரீஸ்வரர் கோயில் அருகில்
24.	தில்லை நகர் பூங்கா – I	தில்லை நகர்
25.	தில்லை நகர் பூங்கா – II	தில்லை நகர்
26.	தமிழ் நகர் பூங்கா	மணலூர்
27.	பொன்னப்பர் நகர் பூங்கா	மணலூர் சேலம் ரோடு
28.	வசந்தம் நகர் அருகில் உள்ள பூங்கா – I	பெரியார் நகர் தெற்கு
29.	வசந்தம் நகர் அருகில் உள்ள பூங்கா – II	பெரியார் நகர் தெற்கு
30.	வசந்தம் நகர் அருகில் உள்ள பூங்கா – II	பெரியார் நகர் தெற்கு
31.	ஜெ. ஜெ நகர் பூங்கா	புதுக்குப்பம் உளுந்தூர்பேட்டை ரோடு
32.	ரீமா ஷெரீப் நகர் பூங்கா	மணலூர்
33.	குமரன் நகர் பூங்கா	தங்கம் நகர்அருகில்
34.	முத்தமிழ் நகர் பூங்கா	ஆலிச்சிகுடி ரோடு
35.	ஓம் கந்தன் நகர் பூங்கா	மணலூர் எருமனூர் சாலை விரிவாக்கம்
36.	சாய் ராம் நகர் பூங்கா – I	பெரியார் நகர் வடக்கு
37.	சாய் ராம் நகர் பூங்கா – II	பெரியார் நகர் வடக்கு
38.	வி.கே.எம் நகர் பூங்கா	வயலூர்
39.	ஸ்ரீ ரயில் நகர் விரிவாக்கம் பூங்கா	மணலூர் எருமனூர் சாலை விரிவாக்கம்
40.	சுவர்ணபூமி அழகன் நகர் பூங்கா – I	மணலூர் எருமனூர்

		சாலை விரிவாக்கம்
41.	சுவர்ணபூமி அழகன் நகர் பூங்கா – II	மணலூர் எருமனூர் சாலை விரிவாக்கம்
42.	சுபம் கார்டன் பூங்கா	சேலம் பைபாஸ்
43.	ரெயின்போ சிட்டி பூங்கா	சிதம்பரம் பைபாஸ் ரோடு
44.	மாருதி நகர் பூங்கா	தில்லை நகர் பின்புறம் பைபாஸ் ரோடு
45.	கல்லூரி நகர் பூங்கா	உளுந்தூர்பேட்டை ரோடு
46.	அஞ்சனா நகர் பூங்கா	மணலூர்
47.	எம். ஆர்.கே நகர் விரிவாக்கம் பூங்கா	எம்.ஆர்.கே நகர்
48.	குறிஞ்சி நகர் பூங்கா	புதுக்குப்பம்
49.	தமிழ் நகர்II பூங்கா	மணலூர்
50.	அன்னை கஸ்தூரி அம்மாள் நகர் பூங்கா I	பூதாம்மூர்
51.	அன்னை கஸ்தூரி அம்மாள் நகர் பூங்கா II	பூதாம்மூர்
52.	அன்னை கஸ்தூரி அம்மாள் நகர் பூங்கா III	பூதாம்மூர்
53.	குப்புசாமி நகர் பூங்கா	வயலூர்
54.	ஸ்ரீ ராமஜெயம் நகர் பூங்கா	பூதாம்மூர்
55.	ஸ்ரீ வெங்கடேஷ்வரா கார்டன் பூங்கா	பூதாம்மூர்
56.	பெரியார் நகர் பூங்கா	பெரியார் நகர் தெற்கு
57.	எம். ஜி.ஆர். நகர் பூங்கா.	பெரியார் நகர் தெற்கு எம்.ஜி. ஆர் நகர்
58.	என்.எல்.சி ரோடு பூங்கா	பூதாம்மூர்

பாலங்களும், மதகுகளும்

நகரில் பாலங்களும், மதகுகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

ஓய்வு விடுதிகள்

நகராட்சிக்கு சொந்தமான ஓய்வுவிடுதிகள் ஏதும் இல்லை.

சத்திரங்கள்

நகராட்சிக்கு சொந்தமாக ஏதுமில்லை.

தளவாடங்கள்

பொது சுகாதாரப்பிரிவில் 5 4 இலகுரக (TATA ACE) , 3 டிப்பர் லாரி , 3டிம்பர்பிளேசர், 1 JCB 1 Mini JCB மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கு டிராக்டர் ஆகிய வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

விளக்கு வசதிகள்

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விவரப்படி மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

வ.எண்	மின் விளக்கு விவரம்	மொத்தம்
1	4 'x 40 வாட்ஸ் குழல் விளக்குகள்	1096
2	சோடியம் ஆவி விளக்குகள்	560
4	CFL விளக்குகள்	582
5	உயர் கோபுர மின் விளக்கு	78 (11இடங்கள்)
6.	LED விளக்கு	**810**
	மொத்தம்	**3126**

வடிகால்வாய்

இந்நகரில் பாதாள சாக்கடை வடிகால்வாய்கள் ஏதும் இல்லை. திறந்த வெளி வடிகால்வாய் மட்டும் நகரத்தில் உள்ள தெருக்களில் இரு பக்கமும் பெரும்பாலான தெருக்களில் கட்டப்பட்டுள்ளது. அவை அவ்வப்போது சுத்தம் செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

பாதுகாப்பு

இந்நகரில் தீயணைப்பு நிலையம் ஒன்று நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

பொது

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5, மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், செங்கல்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு , துணை ஆட்சியர், நகர மன்ற தலைவர், நகரமன்ற துணைத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் ஆகியோரின் அறிவுரைக்கிணங்க, நகராட்சி அலுவலகப் பணியாளர்களின் முழு ஒத்துழைப்புடன் கையிருப்பில் உள்ள நிதி வசதியைக் கொண்டு நிர்வாகம் நன்கு நடத்தப்பட்டு வந்துள்ளது. இந்நகராட்சியின் நிதிநிலைமை பற்றாக்குறையாக இருப்பினும் அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படும் திட்டப்பணிகளுடன் பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. நகராட்சி நிர்வாகம் செயல்பட நல்லறிவுரைகளை அவ்வப்போது வழங்கி ஒத்துழைப்பு தந்த நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை –28, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கல்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர், கடலூர், துணை ஆட்சியர், ஆகியோருக்கு மிகுந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்,
விருத்தாசலம் நகராட்சி.

8-11-22

24